# இலங்கையின் செயலுக்கு இந்தியா துணைபோகிறது


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 21 ஜு. அவ்வல் பிறை: 19 இதழ்: 226

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-12-1990


## ஆஸி. அதிகாரி கண்டனம்

(கன்பரா)

இலங்கை அரசு வடக்கு-கிழக்கு பகுதிகளில் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைக்கு இந்தியா துணைபோவதாக ஆஸ்திரேலிய அரசு அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொடர்பாக ஆஸ்திரேலியா பெரும் கவலை கொண்டுள்ளதாகவும், அந்த அதிகாரி தெரிவித்ததாக 'ரேடியோ ஆஸ்திரேலியா' ஆய்வுரைக் கண்ணோட்ட மொன்றில் தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்; உள்நாட்டு யுத்தத்தை முடி

(4-ம் பக்கம் பார்க்கம்)

## 3 தமிழ் அமைப்புகளை இராணுவத்தில் சேர்க்க முடிவு

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள தமிழ் அமைப்பு உறுப்பினர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தில் உடனடியாக சேர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் புளொட், ரெலோ, ஈ. பி. டி. பி. சேர்த்துக்கொள்ளப்படவுள்ளன. இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களும் இதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனராம்.

சேர்த்துக்கொள்ளப்படும் மேற்படி அமைப்புக்களின் உறுப்பினர்கள் குறுகிய கால இராணுவ பயிற்சியின் பின் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் திரு. ரஞ்சன் தெரிவித்தார். (சி)

● பருத்தித்துறையில்

# பயங்கர பொம்மர் தாக்குதல்

# 5 பேர் பலி; பலர் படுகாயம்

## ஆஸ்பத்திரி, வீடுகள் கடைகள் முற்றாக சேதம்

[நமது புலோலி - வடமராட்சி நிருபர்கள்]

**பருத்தித்துறை நகர்ப் பகுதியில் நேற்றுக்காலை பொம்மர்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒரு பெண் உட்பட ஐவர் பலியானார்கள். இருவர் படுகாயமடைந்தனர். தனியார் வைத்தியசாலை டியூட்டரிகள், வீடுகள், கடைகள் பல பலத்த சேதமடைந்தன**

நேற்றுக்காலை சுமார் எட்டேமுக்கால் மணியளவில் பருத்தித்துறைப் பகுதிக்கு வந்த இரு பொம்மர்கள் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதியில் வல்லிபுரம் பரியாரி ஒழுங்கைக்கு சமீபமாக இரு குண்டுகளை வீசின. இவற்றில் ஒன்று தனியார் வைத்தியசாலைக்கு முன்பாகவும், மற்றொருகுண்டு இதன் எதிரே உள்ள வீட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## சரசாலையில் பெண் பலி

(நல்லூர்)

சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விமானக்குண்டுவீச்சில் ஒருபெண் பலியானார், பலர் படுகாயமடைந்தனர். கால்நடைகள் பல உயிரிழந்தன. பலவீடுகள் சேதமடைந்தன.

சரசாலை தெற்கில் இடம்பெற்ற குண்டுவீச்சில் எஸ் திருமஞ்சனம் என்ற வயோதிப பெண்ணே பலியானவராவார். ஆறுதடவைகள் வீசப்பட்ட குண்டால் இவருடைய

(4ம் பக்கம் பார்க்க)

## வலி-வடக்கில் 5 குண்டு வீச்சு

(காங்கேசன்துறை)

வலி. வடக்கிலும் நேற்று பொம்மர் தாக்குதல் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12.15 மணியளவில் வலி: வடக்குப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரு பொம்மர்கள் அம்பனைச் சந்தியில் இரு குண்டுகளை வீசியபின்னர் அம்பனையிலிருந்து தச்சன்காடு சந்திக்குச் செல்லும் வீதியிலும் மூன்று குண்டுகளை வீசின.

இக்குண்டுவீச்சினால் அப்பகுதியில் பல வீடுகள் பெரிதும் சேதமுற்றன. (86)

## பலாலி ஷெல்; இருவர் பலி

(நல்லூர்)

பலாலியிலிருந்து நேற்று மாலை ஏவப்பட்ட 3 ஆட்லரி ஷெல்தாக்குதல்களினால் உரும்பராய் தெற்கில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு பெண்கள்பலியானார்கள். அக்குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் தனபாலசிங்கம் சரஸ்வதி [வயது 38] இராசம்மா தம்பிராசா (வயது 60) ஆகியவருமே பலியானார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள குடியேற்றங்களுக்கு அரசு ஆயுதம் வழங்குகிறது

(அம்பாறை]

கிழக்கு மாகாணத்தில் அரசு மேற்கொண்டு வரும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களில் குடியேறும் சிங்களவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை அண்மையில் அம்பாறையிலிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர், இவ்வாறு சிங்களவர்களுக்கு ஆயு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கிற்கான நிதி தென் பகுதிக்கு திருப்பம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென வெளிநாடுகள் வழங்கிய நிதியை அரசு தற்போது தென்பகுதிக்கு பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய நிதியிலிருந்து நாட்டின் சகல பகுதிக்கும் தொலைதொடர்பு வசதியை ஏற்படுத்த ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது:

எனினும் வடக்கு - கிழக்கு தவிர்ந்த 17 மாவட்டங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய வானொலியின் இருட்டடிப்பு வேலை

(சென்னை)

இலங்கையில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து 'இந்திய வானொலி' உண்மைக்குமாறான செய்திகளை வெளியிட்டு வருகிறது.

இராணுவத்தால் அப்பாவி தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டும், சொத்துக்கள் உடமைகள் அழிக்கப்பட்டும் வருகின்ற போதிலும் அதுபற்றி இந்திய வானொலி

(4-ம் பக்கம் பார்க்க)

## வயிற்றில் குண்டை அணைத்தபடி வீரமரணம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு கருவாஞ்சிக்குடியில் இராணுவமும், ரெலோ இயக்கமும் கூட்டாக இணைந்து தேடுதல் வேட்டை நடத்தியபோது அவர்கள் பொதுமக்களை வெட்டிக் கொலை செய்ததாகவும், பலரைப் படுகாயப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேடுதலின்போது எருவலைப் பகுதியில் 27 வயதான வீரசிங்கம் என்பவரை வெட்டிக் கொலை செய்தனர்.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள்ஆதரவாளரான நாதன் என்பவரை சுட்டுக்காயப்படுத்தினர். படுகாயமடைந்த நாதன் உடனே தன் வசமிருந்த கைக்குண்டுகளின் கிளிப்புகளை கழற்றியபடி தன் வயிற்றில் அணைத்தபடி நிலத்தில் வீழ்ந்தார்.

இதனால் இராணுவத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சு நடாத்த ஆயுதம் போடவேண்டும்

(கொழும்பு)

''தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வித நிபந்தனையும் இன்றி ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தை நடாத்தப்படும். அல்லாவிடில் பேச்சுவார்த்தை நடாத்தும் எண்ணம் அரசுக்கு இடையாது.''

பாதுகாப்பு இணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று,செய்தியாளர் மாநாட்டில்: உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் குறிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; "அரஸ் ஜவுளியகம்" 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-4158)

சிருடைகளைப் பளிச்சிடும் வெண்மையாகவும் துரிதமாகவும் சலவை செய்திட மில்க்வைற் சலவைப் பவுடர் நம்பகமானது. சிக்கனமானது. 50 கிறும் பைக்கற் ரூ; 3/- மட்டுமே 100 வெற்றுப் பைக்கற் அனுப்பி ஒரு லேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(ஏ 913)

### போட்டோஸ்ரட் பிரதி

தரமான போட்டோஸ்ரட் பிரதிகள் எல்லா வகையான அளவுகளிலும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில், யாழ்ப்பாணம். (ஏ 910)

### வகுப்பு

German Language Classes பட்டப்படிப்புக்களைத்தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 10-12-90 இல் ஆரம்பமாகின்றன. தொடர்புகொள்க; S. Sornalingam, Secretary, German Cultural Association, 4, Gopal Lane. Vannarponnai. (மனோகரா தியேட்டர் அருகில்)
(சி- 4168)


# தென் இந்திய திருச்சபை மாங்குளத்தில் கட்டிய வீடுகள் இராணுவ நடவடிக்கையால் சேதம்

(மாங்குளம்)
மாங்குளத்தில் தென்இந்திய திருச்சபையினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் பல இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்துள்ளன.

தென் இந்திய திருச்சபையினுல் இப்பகுதியில் உள்ள ஏழைகளி, விதவைகள் வீடில்லாதோருக்கு கட்டிக்கொடுத்த நாற்பது வீடுகளில் பல சேதமடைந்துள்ளன.

இவ்வீடுகளிலுள்ள பாவனைப் பொருட்கள், கண்ணடிகள் பல சேதமடைந்து பாவனைக்கு உதவாதவைகளாகக் காணப்பட்டன. (150)

## கட்டட ஒப்பந்தகாரருக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
யாழ், கல்வித்திணைக்களத்தில் ஒப்பந்த வேலை மேற்கொண்ட அனைத்து கட்டட ஒப்பந்தக்காரரும் நாளை 8-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகா வித்தியாலயத்தில் தவருது மளிக்குமாறு சங்கச்செயலாளர் கேட்டுள்ளார்.

## மொழிபெயர்ப்பாளர் பரீட்சை மூலம் தெரிவு

(கொழும்பு)
சகல திணைக்களங்களிலும் வெற்றிடமாகவுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் வருடாந்தம் பொதுப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான பாடத்திட்டத்தை பரீட்சைத்திணைக்களத்துடன் இணைந்து தயாரிக்குமாறு பொதுநிர்வாக உள்நாட்டு மாகாண அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா உத்தரவிட்டுள்ளார். (ச)

## திருவருகைக் காலம் முதல் வார சிந்தனை

எதிர்பார்ப்பு என்பது எல்லோருக்கும் உண்டு உழவன் விதைப்பதற்கு வானத்தை எதிர்பார்க்கின்றான். விதைத்தபின் அறுவடையை எதிர்பார்க்கின்றான். வாழ்க்கையில் எல்லா எதிர்பார்ப்புக்களும் நிறைவேறுவதில்லை. ஏமாற்றங்களும் வருவதுண்டு.

ஆண்டவனை எதிர்பார்ப்பவன் ஏமாற்றமடையமாட்டான். முன்னொரு காலத்தில் இஸ்ராயேல் மக்கள் மீட்பாரென்ற மெசியாவை எதிர்பார்த்தார்கள். அவரது பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது, எதிர்பார்க்கப்பட்டது அந்த எதிர்பார்ப்பு இயேசுவின் பிறப்பில் நிறைவேறியது.

இயேசு மீண்டும் வருவார். அது அவரது இரண்டாவது வருகையாகும். அது முழுமையான மீட்பின் காலம். அந்த வருகைக்கு விழிப்பாயிருந்து ஆயத்தம் செய்ய திருவருகைக்கால வழிபாடுகள் எமக்கு உதவியாயுள்ளன.

"ஆண்டவரே நீரே எங்கள் தந்தை, நீரே எங்கள் மீட்பர்... எங்கள் பக்கமாய் திரும்பியருளும். வானத்தை கிழித்து நீர் இறங்கி வரமாட்டீரா?"
(இசையாஸ் 64;1)

அருட்திரு. ஜே. நீக்கிலஸ்

## இருபது குழந்தைகளுக்கு அறவழிக்குழு உதவி

(யாழ்ப்பாணம்)
அறவழி கிராமிய குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள இருபது குழந்தைகளின் குடும்பங்களுக்கு அறவழிக்குழு உணவுப் பொருட்களை வழங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இப்பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

அறவழி குழுவின் தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில் இம்மாதம் 12-ம் திகதி மேற்படி குழுவின் பணிமனையில் வைத்து இப்பொருட்கள் வழங்கப்படும்.

## மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)
ஆவரங்கால், புத்தூர்ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு உலர் உணவு வழங்கப்பட்டதாயினும் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அகதிகள் வசாவிளான், பலாலி, கோணுவலை, திடற்புலம் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்பதும் இவர்கள் மாத வருமானம் எதுவுமின்றி தவிப்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிக்கப்பட்ட இடங்களை சேர்ந்த அகதிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்காதது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. (க)

## வீடு தீக்கிரை

(புங்குடுதீவு)
புங்குடுதீவு குறிகாட்டுவான் பகுதியிலுள்ள ஒருவீடொன்று தீப்பிடித்து எரிந்துள்ளது. அடுப்புக்குப் பக்கத்தில் விறகுகளை காயவைத்தபோதே விறகில் தீப்பிடித்ததாக கூறப்படுகிறது.

புங்குடுதீவு குறிகாட்டுவானைச் சேர்ந்த கே. சபாரெத்தினத்தின் வீடே இவ்வாறு தீப்பிடித்தது.

# "போராளிகள் உயிருடன் இருந்தாலும் இறந்தாலும் புனிதர்களே" —சூசை கருத்து

(வடமராட்சி)
"போராளிகள் உயிருடன் இருந்தாலும் இறந்தாலும் புனிதர்களே" அவர்கள் உயிருடன் இருக்கும்போது எமது தாய்நாட்டிற்காக தமது உயிர் உடல் அத்தனையும் அர்ப்பணித்த தியாகிகள்" என்று வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. சூசைதெரிவித்தார்.

அண்மையில் எள்ளங்குளம் என்னும் இடத்தில் இறந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லடக்க மைதானமான மாவீரர் துயில் இல்லத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி இத்திறப்பு விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திரு. சூசை மேலும் பேசுகையில் "எமது தமிழீழமண் மீட்பிற்காய் உயிர் நீத்தமாவீரர்கள் நாம் முன்பு அவ்வவ் இடங்களிலேயே அடக்கம் செய்து வந்தோம் மேற்படி வீரர்களின் தியாகங்களால் நாம் இன்று தன்னிறைவு கண்டுவருகின்றோம் எனவே இவ்வீரர்களின் சடலங்கள் இனிமேல் புனித மெருகுடன் மாவீரர்துயில் இடங்களில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழீழமெங்கும் மாவீரர் துயில் இல்லங்கள் ஆரம்பித்துள்ளோம்" என்றார். (51)

## யாழ்.மத்திய கல்லூரி புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியின் புதிய அதிபராக, திரு. என். சண்முகநாதபிள்ளை பதவியேற்றுள்ளார்.

சிறந்த கவிஞரான இவர் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.


## திருமண நன்றி நவிலல்

சென்ற 02-12-1990 ஞாயிற்றுக்கிழமை வேல் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்த சகல உறவினர்களுக்கும், அன்பர்களி, நண்பர்களுக்கும், சகோதர, சகோதரிகளுக்கும், லோகநாதன் தம்பதிகளும், மணமக்களின் பெற்றோர்களாகிய குருநாதன் விஜயலட்சுமி குடும்பத்தினரும், பரிமளம் வேலாயுதபிள்ளை குடும்பத்தினரும், இரத்தினசிங்கம் குலதேவி சிற்றன்னை குடும்பத்தினரும் தமது நன்றி நவிலலைத் தெரிவிக்கின்றோம்.

வேலாயுதம் பரிமளம் தம்பதிகள்,
566, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குருநாதன் விஜயலட்சுமி தம்பதிகள்,
திரைச்சீலை கோயில்
மடத்தடி, நல்லூர்.

(ஏ 917)


## அகதிமுகாமில் ஒருவர் மரணம்

(நெல்லியடி)
கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நோய் வாய்ப்பட்டு மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவர் திருகோணமலையைச் சேர்ந்த தில்லை நடராசா என்பவர் ஆவார். இவரது மரணச் செலவுகளை கரவெட்டி வட்டவை சார்பில் திரு. எஸ். சிவயோகம் நடைமுறைப் படுத்தினர். (55)

## 10 பேருக்கு நாய் கடித்தது

(நெல்லியடி)
வடமராட்சிப் பகுதியில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனுல் பொதுமக்கள் பலரும் அச்சத்துடன் செல்லவேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது.

கடந்த ஓரிரு நாட்களில் மட்டும் 10 பேர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் நாய்க்கடிக்கான ஊசி மருந்து மந்திகை ஆஸ்பத்திரியில் இல்லாமையால் பெரிதும் கஷ்டம் அடைகின்றனர். (55)

## பெண்களைத் தாக்கும் எலும்பு மூட்டுநோய்

(லண்டன்)
மருத்துவத் துறையில் இதுவரை எலும்பு மூட்டு நோய் (ஆத்ரைற்றீஸ்) பூரணசிகிச்சைவழங்கமருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனல் வலியைக் குறைக்க வீக்கத்தைப் போக்க மருந்துகள் உண்டு. இந்நோய்பெரும்பாலும் பெண்களைத்தாக்குகிறது.

எலும்பு மூட்டுகளிலுள்ள வழுவழுப்பான திரவம், குன்றி எலும்புகள் முனை ஒன்றொடொன்று உராய்ந்து காயப்படுவதால் எலும்பு மூட்டு நோய் வருகின்றது.

பரதம் ஆடுவதாலும், கடினமான வேலையாலும் இந்நோய் வருவதாக லண்டனிலுள்ள ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இந்நோய்க்கு அங்குபஞ்சர், சித்தவைத்தியம். யூனானி வைத்தியம், ஆங்கில வைத்தியத்தில் மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. (ச)


## தவறிவிட்டது

வேலணை மேற்கு, பரமஞானசம்பந்தபிள்ளை சிவலோகநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (441341679 V) யாழ்ப்பாணம், தேசிய சேமிப்பு வங்கியினுள் நின்றபோது தவறிவிட்டது. இது அவருக்கு ஒவ்வொருநாளும் தொழில் நிமித்தம் பாவனைக்குரியது. கண்டெடுத்தவர்கள் தயதுசெய்து சிரமத்தைப்பாராது நல்லூருக்கு முன்பாக உள்ள 'மண்டேலா ரேடர்' புத்தகசாலையில் ஒப்படைக்கவும். மறக்கமுடியாத உதவியாக இருக்கும். அத்துடன் சன்மானமும் வழங்கப்படும்.
(சி 4169)


## மருதனுமடம் கோட்ட கொத்தணி அதிபர் கூட்டம்

(மானிப்பாய்)
மருதனுமடம் கோட்ட கொத்தணி அதிபர்களை மருதனுமடம் கோட்ட கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரம் இம்மாதம் 10-ம் திகதி காலை 10 மணிக்கு சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் பாடசாலை சம்பந்தமான ஆசிரியர் வரவு இடமாற்றங்கள் பற்றிமுக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் இப்பகுதி கொத்தணி அதிபர்கள் அனைவரையும் தவருது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# நாய்களின் நடமாட்டம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுபாமான புத்தி சித்தத்துடன் ஊர்வன பறப்பன உட்பட ஜீவராசிகள் எதுவுமே நிம்மதியாக நடமாட இலங்கை அரசோ, அதன் முப்படைகளோ இதுவரை விட்டு வைக்கவில்லை!

பறந்தடிக்கும் காகங்கள் கட்டாக்காலியாக இரைதேடி அலையும் ஆடுகள், மாடுகள், வீட்டு நாய்கள் என்ன! ஊர்ந்து திரியும் பாம்புகூட ஹெலித் தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்துறந்த செய்திகள் தெரிந்ததே!

உடனுக்குடன் உயிரைப் பறிகொடுத்த ஜீவராசிகளின் நிலை பரவாயில்லை. உயிர்பிழைத்து ஆனால் விசர்பிடித்து அலைந்து திரியும் நாய்களின் நடமாட்டம் அனைவருக்கும் அச்சம் ஊட்டுவதாக உள்ளது.

இராணுவ கெடுபிடிகளாலும் இதரதொல்லைகளாலும், பூட்டிய வீடுகளிலுள்ளும், தெருவீதிகளிலும், நிர்க்கதியாக விடப்பட்ட நாய்கள் பசிபட்டினிக்கு உட்பட்டு விசர்பிடித்து எதிர்படுவோரை கடித்து குதறிய பல சம்பவங்கள் குடாநாடு முழுவதும் நிகழ்ந்து வருகின்றன.

இப்பெருந் தொல்லையை போக்க கட்டாக்காலியாகத் திரியும் நாய்களைப் பிடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரவேற்கப்படவேண்டியதுடன், இப்பெருமுயற்சிக்கும் சம்பந்தப்பட்ட பொது ஸ்தாபனங்களும், பொதுமக்களும், தமது ஒத்துழைப்பு நல்க முன்வரவேண்டும்.

எங்கும், எதிலும், பலத்த தட்டுப்பாடு நிலவும் இப்போர்க்காலச் சூழ்நிலையில் விசர்நாய் கடி மருந்துக்கு வழியேதுமில்லை என்று வைத்தியசாலைகளே கைவிரித்து விட்டன.

மருந்து இல்லையே என்று விசர்வந்த நாய்களை தெருவீதிகளில் நடமாட எவருமே அனுமதிக்க முடியாது. எனவே, விசர்பிடித்து அலையும் நாய்களை இனம் கண்டவுடன் அவற்றைப் பிடித்து அழிக்க சம்பந்தப்பட்டவர்களுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்!

வீட்டு நாய்களை கட்டி வளர்த்து, உங்களையும் பொதுமக்களையும்காத்து வாழ ஒத்துழைப்பு வழங்குவது அனைவரினதும் பொறுப்பாகும்.

— மயூரன்

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'சனிமாற்றம்' சஞ்சிகை வெளியீட்டு வைபவம், கடந்த 3ம் திகதி சித்திரமேழிப்பழனியானந்தன் சனசமூக நிலையத்தில் திரு. பொ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது

இந்நூலை பேராசிரியர் திரு. ரி. சத்தியதாஸன் எழுதியுள்ளார்.

## நியாய விலைக்கடை

(புலோலி)

பருத்தித்துறை நகரில் பொதுமக்களின் வசதி கருதி நியாய விலைக்கடை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கடையில் அத்தியாவசியப்பொருட்கள் நியாயவிலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (6.)

# தமிழ்மொழிப் பற்றும் இனப்பற்றும் அவசியம்!

தமிழ்மொழிப் பற்றும்-தமிழ்க்கலைப்பற்றும் - தமிழ் இனப்பற்றும்-தமிழ் நிலப்பற்றும் உள்ளவனையே தமிழன் என்போம்.

இப்பற்றற்ற தமிழன் ஒப்பற்ற தமிழ் வாழ்வுக்குப் பயனற்ற உப்புச் சப்பற்ற தமிழனே.

தமிழ்மொழியை எத்தனை தமிழன் தன்வாயில்வைத்திருக்கிறான்:

பழைய 'சமஸ்கிருதத்தை' யும் அவன் இன்றும் விட்டபாடில்லை. புதிய 'இங்கிலீசை,யும் அவன் இன்றும் விட்டபாடில்லை.

அவையைச்'சபை'என்றும்-விரிவுபடுத்தலை 'விஸ்தரிப்பு' என்றும்-உறுப்பினரை 'அங்கத்தவர்' என்றும்- ஒப்புதலை 'அங்கீகாரம்' என்றும்- பேராளரை 'பிரதிநிதி' என்றும்- போரை 'யுத்தம்' என்றும்- அமைதியை 'சமாதானம்' என்றும் இப்படி எத்தனையோ தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்து - சமஸ்கிருதத்தைப் பயன்படுத்துவது இன்றுந்தான் நின்றபாடில்லை.

வெள்ளையன் விட்டுப்போன 'இங்கிலீசின்' தொல்லைவேறு- ஈவினிங் பைப் ஒ குளக்' ('Evening Five O' Clock) போல் போஸ்ட் ஒபிஸ் (Post Office)இல் மீட் (Meet) பண்ணுவம் டோன்ற் பொகெற் (Dont Forget) என்று பேசுகிறான் தமிழன். இப்படிப்பேசுவது இன்று படித்ததமிழனின் இயல்பாகிவிட்டது, வெள்ளைக்காரன் வெளியேறி நாற்பத்திரண்டு ஆண்டுகளின் பின்பும் 'இங்கிலீஸ்' நம்மண்ணைவிட்டு வெளியேறுவதாயில்லை.

இந்தநிலை இனியும்மாறுதா? பிள்ளைகளுக்குப்பெயர்வைக்கும் போது தூயதமிழில் பெயர் வையுங்கள்.

ஷியாமி, நிஷாந்தி, திஷான், றெஜினு, கிஷோ என்றெல்லாம் பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதை நிறுத்தி வள்ளுவன், வேந்தன், மாதவி, நிலா என்று தூயதமிழில் பெயர் வைத்தால் தமிழ்மொழி சிறக்காதா?

இதுவரை பெற்றோர் வைத்த பெயர்கள் போகட்டும். இனி வைக்கும் பெயர்களாவது தமிழ்ப்பெயர்களாயிருக்கட்டும்.

**இதுவரை பெற்றோர்**

**வைத்த பெயர்கள்**

**போகட்டும்**

**இனி வைக்கும்**

**பெயர்களாவது**

**தமிழ்ப்பெயர்களாக**

**இருக்கட்டும்**

சிறிலங்காவின் வானொலி ஒலிபரப்பில் தமிழ்க்குழந்தைகளின் பிறந்த நாளை 'ஹெப்பி பெர்த் டே டு யூ...' பாட்டுப் பாடிக் கொண்டாடும் பெற்றோர் என்ன ஷேக்ஸ்பியரின் உறவினர்களா? தமிழுணர்வு பெறுங்கள்.

ஆங்கிலம் படிக்கக்கூடாது என்பதல்ல? உலகின் எத்தனை மொழிகள் ஏற்றுக்கொண்டாலும் நல்லதே. ஆனால் தமிழனும் தமிழனும் சந்திக்கும் போது ஆங்கிலத்திலும்-ஆங்கிலம் கலந்த அரைகுறைத்தமிழிலும்தான் பேசவேண்டுமா? தமிழன் தமிழனுக்கு அனுப்பும் பிறந்தநாள் வாழ்த்துமடலையும் பிறவாழ்த்துமடல்களையும் ஆங்கிலத்தில்தான் அனுப்பவேண்டுமா?

முன்பெல்லாம் யாழ்ப்பாணத்தில், திருகோணமலையில், மட்டக்களப்பில், மன்னாரில், வன்னியில் எங்கும் தமிழ்விழா நடக்கும். வள்ளுவர் விழா, பாரதிவிழா, பாரதிதாசன் விழா நடக்கும், இலக்கிய விழா, இலக்கிய மதிப்பாய்வு விழா நடக்கும். இத்தகைய விழாக்கள் இன்றில்லையே, இல்லாமல் போனதேன்?

தமிழறிஞர்கள், பண்டிதர்கள் நம்மிடையே இருந்தும் தினகரனுக்குக் கட்டுரை எழுதுவதையும், சிறிலங்காசாகித்திய அக்கடமியின் பரிசுக்கு ஏங்குவதையும் தவிர நாம் என்ன செய்தோம்?

தமிழினத்தின் தொன்மை வரலாற்றை முழுஅளவில் ஆய்வு செய்து வெளிக்கொணர ஒரு தமிழ் அறிஞர் முயலக்கூடாதா?

அருந்தமிழ்க் கலைகளை அழிவின் விளிம்பில் பார்க்கிறோம். வட்டக்களரிகளில் தமிழீழ மக்கள் ஆடும் தென்மோடி-வடமோடி நாட்டுக்கூத்துகள் வழக்கிழந்து வருகின்றன, நாதசுரக் கலைஞர்கள் நாளுக்கு நாள் குறைந்தனர். திராவிடர் சிற்ப முறையில் தமிழர்கள் வடித்த தேர்ச்சிற்பக்கலை தேய்ந்துபோனது.

மாற்றாரை எதிர்த்துவென்ற பண்டைத் தமிழ் மன்னர்களை நினைவு கொள்ளுங்கள். எல்லாளனை, சங்கிலியனை, குளக்கோட்டனை மட்டுநகராண்ட புலியனை எண்ணுங்கள்.

தமிழீழவிடுதலைப் போரில் ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' என்ற பெயரோடு புலிகள் இயக்கம் தோன்றிய நாள் தெரியுமா?

தமிழீழ விடுதலைப்போரில் முதன்முதலில் மடிந்த விடுதலைப் புலியின் பெயர் தெரியுமா?

தமிழீழ விடுதலைப்போரில் முதன் முதலில் எதிரிகளின் 'ஹெலிக்கொப்டர்' விமானம் எங்கே புலிகளால் வீழ்த்தப்பட்டது தெரியுமா?

## தமிழர்கள் சந்தித்தால் ஆங்கிலத்தில் பேசவேண்டுமா?

கோலாட்டத்தையும் வசந்தனையும் கும்மியையும் தேடுகிறோம். இந்நிலையில் இழிவான மேனாட்டுக் கலாச்சாரங்கள் இங்கே நுழைவதையும் காண முடிகிறது.

தமிழீழத்தில் தான் தமிழிசை பற்றிய முதல் ஆய்வு நூலை விபுலானந்த அடிகளார் 'யாழ்நூல்' என்ற பெயரில் தந்தார்.

தமிழீழத்தில்தான் நம் கையிலுள்ள பழந்தமிழ் நூல் தொல்காப்பியத்தை தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை முதன் முறை பதிப்பித்தார்.

தமிழீழத்தில்தான் முதல் மொழியியல் ஆய்வில் ஞானப்பிரகாச அடிகளார் தன்னை ஈடுபடுத்தி தமிழின் வளத்தை வெளிக்கொணர்ந்தார்.

இந்தத் தமிழீழத்தில் தமிழ் மொழி உணர்வையும் தமிழ்க் கலை உணர்வையும் தமிழினம் இழக்கலாமா?

தமிழன் தன் வரலாற்றுச் சிறப்பை யெண்ணித் தலை நிமிர வேண்டும்.

தமிழ்ப் பற்றும் தமிழ்மண் பற்றும் உள்ளவன் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பட்டென்று பதில் தருவான் இல்லாதவன் தலையைச் சொறிவான்.

ஒவ்வொரு தமிழனும் தன் தாய் மண் வாழ்வோடு ஒன்றிணைய வேண்டும். தமிழீழ வயலுக்கு வியர்வை கொட்டுங்கள் தமிழ்மண் தழைக்கட்டும். தமிழீழக் கடலில் படகுகளைவிடுங்கள் தமிழீழ நீர்ப் பரப்பை அவை ஆளட்டும். தமிழீழ வானத்தை நோக்கி ஏவுகணை செறியுங்கள் தமிழ் வானம் வலிமை பெறட்டும்.

உலகம் விடுதலைப் புலிகளின் தமிழீழத்தின் பேராற்றலை உணர்ந்துள்ளதாக தமிழீழ வீரப்போரினால் இன்று தமிழன் தன் தாய் மொழி, கலை, பண்பாடு, இனம் தாய் மண் ஆகியவற்றின் பேராற்றலை உணர்ந்து தமிழீழ வாழ்வில் முழுமையாகத் தோய வேண்டும்.

— நன்றி; நெருப்பு

# இராசி பலன்

07-12-1990

வெள்ளிக்கிழமை

ஷஷ்டி பி. இ. 2-40 வரை, ஆயிலியம் மு. இ. 8-22வரை, மரணயோகம், நல்ல நேரம் காலை 6-17 முதல் 7-47 வரை. ராகுகாலம் காலை 10-47முதல் 12-17 வரை.

மேடம்- அதிகாரிகள் துன்பம், அலைச்சல் மிகுதி, ஏமாற்றம், குடும்ப கஷ்டம்.

இடபம்- காரியவெற்றி, பொதுத்துறை ஈடுபாடு, பணவரவு, குடும்ப சந்தோஷம்.

மிதுனம்-வீண்பழிகேட்டல், தடுமாற்றம், பயணங்களால் துன்பம், சகோதர பகை,

கடகம்- தொழில் லாபம், வீட்டில் சுபகாரியம், பணவரவு, தாய்வழிநினைவு.

சிங்கம்- வானயோகம், தொழில்குறைவு, பண்நெருக்கடி மனக்குழப்பம்; கவலை.

கன்னி- பதவி மாற்றம், தொண்டுப்பணி, குடும்ப நன்மை, வாய்த்தர்க்கம்.

துலாம்- கண்ணில் ரோகம், காரியபலிதம், புதியமுயற்சி, அதிகாரிகள் பாராட்டு.

விருச்சிகம்- கருத்துமோதல், குடும்ப சச்சரவு, அலைச்சல் மிகுதி, கண்ணியக்குறைவு

தனுசு- குறைகேட்டல், அதிகயோசனை, தொழில் பாதிப்பு, குடும்பத்தில்செலவு.

மகரம்- பெருந்தன்மை, கடித உறவு, பொருளாதார மேம்பாடு, காரியவெற்றி.

கும்பம்- குடும்பத்தில் போராட்டம், சகோதரபகை, வைத்தியசெலவு, பதவிச் சிறப்பு.

மீனம்- குடும்ப விரோதம், சென்றஇடத்தில்பகை, காரிய தடை, அயலவர் துன்பம், மனச்சுமை.

ஜோஸ்யர்.

## திணைக்களத் தலைவர்கள் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகலதிணைக்களத் தலைவர்களுக்கான கூட்டம் இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சகல திணைக்களங்களின் தலைவர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென்று யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் வேண்டுகோள் விடுத்துள்ளார். (154)

## பாரதிதாசன் படைப்புகள் அரசுடமையாக்கப்பட்டது

(சென்னை)

பாவேந்தர் பாரதிதாசன் படைப்புக்கள் யாவும் நேற்று முன்தினம் முதல் தமிழக அரசின் உடமையாக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் பாவேந்தர் பாரதிதாசன் குடும்பத்தினருக்கு 8 லட்சம் ரூபா தமிழக அரசினால் வழங்கப்படவுள்ளது.

பாரதிதாசனின் நூல்களின் பதிப்புரிமைகள் யாவற்றையும் தமிழக அரசு பொறுப்பேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (மா)

## நல்ல இன தென்னங்கன்று

(மானிப்பாய்)

நவாலி தெற்கு கிராமிய உற்பத்திக் குழுவினரால் அப்பகுதி மக்களுக்கு நல்ல இன தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் வழங்கப்பட்ட மேற்படி தென்னங்கன்றுகள் மிகவும் குறைந்தவிலையில் வழங்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணக் கல்லூரி

## புதிய மாணவர் அனுமதி 1991

பின்வரும் வகுப்புக்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

| | |
|---|---|
| முதலாம் வருடம்: | 01-2-85க்கும்31-1-86க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம். |
| ஆறும் வருடம்: | 01-2-80க்கும் 31-1-81க்குமிடைப்பட்ட காலத்தில் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம். |
| 12ம் வருடம்: (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) | க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சிறந்த தகைமைகள் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். |

ஆற்றல்மிகுந்த மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு: 20-12-90

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று ரூபாய் 50/-ற்கான பற்றுச்சீட்டுடன் சமர்ப்பிக்கவும்.

அதிபர்

[எ-918]

★ அஸாமில்

# இந்திய இராணுவம் கொடுமை விசாரணை நடத்த உத்தரவு

[புதுடில்லி]

அசாம் மாநிலத்தில் 'உல்பா' தீவிரவாதிகளுடன் கடும் யுத்தத்தில் ஈடுபட்டுவரும் இந்திய இராணுவம் அப்பாவிப் பொதுமக்களைப் பெருமளவில் கொடுமைப் படுத்தியுள்ளதாக பலத்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து இது குறித்து விசாரணை நடத்துமாறு மாநில ஆளுநர் உத்தரவிட்டுள்ளார் என்றும் இது ஓர் அவதூறான குற்றச்சாட்டெனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அப்பாவிப் பொதுமக்கள் மீது இராணுவம் பல கொடுமைகளை மேற்கொண்டதற்கான ஆதாரங்களை உள்ளூர் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. பெருமளவு பொதுமக்கள் இவ்வாறு பலவழிகளிலும் இம்சிக்கப்பட்டதாகவும் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. (சி)

## தீவுப் பகுதியில் கர்ப்பிணி, குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க ஏற்பாடு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதிகளிலுள்ள இரண்டு வயதுக்குட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் போஷாக்கு ஊட்டக்கூடிய வகையில் சத்துணவான எண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

இதனால் தீவுப்பகுதிகளிலுள்ள பெருந்தொகையான குழந்தைகளும் தாய்மார்களும் நன்மையடையவுள்ளனர். (101)

## இலவச உணவுப் பொருள்: மானிப்பாயில் மெழுகுதிரி வெளிச்சத்தில் விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைகளில் 4வது கட்டத்துக்கான உலர் உணவுப் பொருள் விநியோகம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுமக்களின் நன்மை கருதி மேற்படி சங்கக்கிளைகளில் காலை முதல் இரவு 7 மணி வரை மெழுகுதிரி வெளிச்சத்திலும் பொருள்கள் விநியோகம் செய்வதைக் காணமுடிகின்றது. (71)

## வலி - வடக்கில் திருடர் தொல்லை

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் இராணுவ நடவடிக்கையால் மக்கள் வெளியேறிய பகுதிகளில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் விடுதலைப் புலிகள் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டுள்ளனர்.

வீட்டு உடமைகள், கால்நடைகள், மின்சார பொருட்கள் போன்ற அகப்பட்ட பொருட்களை சுருட்டுவதில் திருட்டுப்பேர்வழிகள் ஈடுபடுவதாக தெல்லிப்பழை விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (86)

## உணவுப் பொருட்களை அகதிகள் முகாம்களுக்கு அரச அதிபர் வழங்குவார்

(யாழ்ப்பாணம்)

இதுவரை அரச சார்பற்ற நிறுவனங்களினால் பராமரிக்கப்பட்டுவந்த அகதிகள் முகாம்களுக்கான வாராந்த உணவுப் பொருள் விநியோகத்துக்கான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். மேற்படி ஏற்பாடு டிசம்பர் முதல் வாரத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் தத்தம் முகாம்களுக்கு அண்மையில் உள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகளிலிருந்து வாராந்தம் பங்கீட்டு உணவுப் பொருட்களைப் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபர்களால் வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகளைக் காட்டி மேற்படி உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வாராந்த உணவுப் பங்கீட்டை, அனுமதி அட்டைகள் உறுதிப்படுத்துவதால் இடம்பெயர்ந்துசெல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் அனுமதி அட்டைகளை எடுத்துச் செல்லவேண்டியது அவசியமாகவுள்ளது.

## 'நாளை மலரும் தமிழ்ஈழம்'

(கொக்குவில்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் மாவீரர் தினத்தை முன்னிட்டு கொக்குவில் மேற்கு ச. ச. நிலைய மண்டபத்தில் 'நாளை மலரும் தமிழீழம்' என்னும் நாடகமும், போர் நடனமும் இடம்பெற்றது.

ஆறுகால்மடம் ச. சமூகநிலையத்தினரின் அஸ்தமனத்தில் உதயம் என்னும் நாடகமும் நடைபெற்றது. இந்நாடகங்கள் பலமுறை மேடையேறி பலரின் பாராட்டுக்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (135)

## பருத்தித்துறை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மதிலோரும் விழுந்து வெடித்தன)

இச்சம்பவத்தின்போது பாடசாலைக்கு கடமைக்குவந்த பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய ஆங்கில ஆசிரியரான கற்கோவளத்தைச் சேர்ந்த திரு. ஜோர்ஜ் அருட்பிரகாசம் (57 வயது) தேங்காய் வியாபாரியான கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த என். ஜீவராஜா (32 வயது) மண்டலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து அல்வாய் சக்கோட்டையில் வசித்து வரும் தேங்காய் வியாபாரம் செய்யும் ப. பிரான்சிஸ் (35 வயது) நகருக்கு பொருட்களை வாங்கவந்தவர்களான மாதனையைச் சேர்ந்த மு. கணபதிப்பிள்ளை (66 வயது) பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி இந்திராணி கிருஷ்ணலிங்கம் (35 வயது) ஆகிய ஐவரும் உடல்சிதறி ஸ்தலத்திலேயே பலியானார்கள். பலியானோரின் சடலங்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்த புலோலி கிழக்கைச் சேர்ந்த ந. ரவிச்சந்திரன் (27 வயது) தும்பளை மேற்கைச் சேர்ந்த தி. இராசகுமார் (20 வயது) ஆகிய இருவரும் சிகிச்சைக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பருத்-யாழ். பிரதான வீதிக்கு கிழக்குப் புறத்திலுள்ள டாக்டர் சி. வடிவேலுவின் தனியார் வைத்தியசாலை, எஸ். கோவிந்தபிள்ளை, எஸ். இராசலிங்கம், ரி. திருமால் ஆகியோரின் வீடுகளும், கனகா புத்தகசாலை, ரதி ஸ்ரோர்ஸ் என்பனவும் முற்றாகச் சேதமடைந்தன. அருகிலுள்ள வல்லிபுரப் பரியார் ஒழுங்கையிலுள்ள மொடேண் கொமஸ் டியூட்டரி, திரு. வி. செல்வராஜா என்பவரின் வீடும் சேதத்துக்குள்ளானது. சேதமடைந்த கட்டிட இடிபாடுகளுக்கிடையே மரணமானவர்களின் துண்டிக்கப்பட்ட கால்களும் மீட்கப்பட்டன.

சம்பவம் நடந்த இடத்தின் தென்பகுதியில் 10 யார் தூரத்தில் செஞ்சிலுவைக் களஞ்சியமும் இருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது. [61-51]

## பரீட்சையை ஒத்திவைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பலாலி, கோப்பாய் ஆகிய இரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் இறுதியாண்டு பரீட்சைகளைப் பிற்போடு மாறுபரீட்சை ஆணையாளரை மேற்படி கலாசாலை அதிபர்களின் சார்பில் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (153)

## பலாலி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரி. தனபாலசிங்கம் (வயது 41) அவருடைய மகன் த. விதர்சன் (வயது 2), திலீபன் (வயது 6) ஆகியோரே காயமடைந்தார்கள்.

இதேவேளை கோப்பாய் ஆஸ்பத்திரிக்குஅருகாமையில்வந்து விழுந்து வெடித்த ஷெல்லினால் ஞானரஞ்சிதம் செல்வரஞ்சன் (வயது 56) என்ற பெண்மணிவர் காயமடைந்தார். சில ஷெல்கள் பனந்தோப்புக்குள் விழுந்து வெடித்தன. இதனால் பனை மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. (153)

## சரசாலை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வீடு தரைமட்டமாகியது.

இச்சம்பவத்தில் காயமடைந்த பலரில் வேலுப்பிள்ளை கார்த்திகேசு (வயது 87) என்ற வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சாவகச்சேரியில்

சாவகச்சேரியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் படுகாயமடைந்த கைதடியை சேர்ந்த இராமன் மயிலன் (வயது-36) என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனையோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி சிவன்கோயிலுக்கு அருகாமையில் பொம்மர்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 7 மணியளவில் நடந்த தாக்குதலில் இரு மீன்வியாபாரிகள் காயமடைந்தனர் சாவகச்சேரி ரயில் நிலையம், சிவன்கோயில் முன் மண்டபம் கோயில் சுற்றுடலிலுள்ள நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரியில் நேற்று காலை முதல் நான்கு தடவைகள் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது. (153)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமம் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் புவன் (சத்தியநாதன் சிவகுமார், 1-ம் கட்டை ஏழாலை) வீரமரணமடைந்தார். (வி)

## இலங்கையின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விற்கு கொண்டுவரவோ அல்லது அங்கு சமாதானத்தை ஏற்படுத்தவோ இந்தியா எந்த தவி முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

தமிழர்களுக்கு தார்மீக ரீதியில் தமிழகத்திலிருந்து ஆதரவு கிடைப்பதை கட்டுப்படுத்தவும் இந்தியா தீவிர முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்தார். [சி]

## சிங்கள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் வழங்கப்படுவதால் தமிழருக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாம்.

தமது சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு தமிழ் அகதிகளுக்கு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் அதற்கான சூழ்நிலை உருவாகவில்லையென்றும் தமது பகுதிகளில் பெருமளவு சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

## மிதிவெடியில் படுகாயம்

(நல்லூர்)

பண்ணைக் கடலில் நேற்று மீன் பிடிக்கச் சென்றவர் மிதிவெடியைக் கல்லால் எறிந்ததில் மிதிவெடி வெடித்துப் படுகாயமடைந்தார்.

மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் தூண்டிலுக்குக் கட்டுவதற்காக எடுத்த கல் பாரமற்று இருந்ததால் அதை அவர் வீசியபோது பாசிக்குள்ளிருந்த மிதிவெடியில் பட்டு மிதிவெடி வெடித்தது.

இச்சம்பவத்தில் நவாந்துறையைச் சேர்ந்த 35 வயதான லோறன்ஸ் அன்ரனி என்பவரே படுகாயமடைந்தவராவார்.

## இந்திய வானொலி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எந்தவித செய்தியையும் இதுவரை வெளியிடவில்லை.

என்னும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய் பிரசாரத்திலும், அவதூறு செய்வதிலும் செய்திகளின் பெரும் பகுதியை கடந்த சில வாரங்களாக செலவிட்டுவருகிறது. (சி)

## வடக்கு - கிழக்கிற்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நுண் அலை தொலைத் தொடர்பு முறையை மேற்கொள்ளுமாறு திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. தமிழ் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் வேறிடங்களுக்கே செல்லவுள்ளது.

இதேபோல் போக்குவரத்து கடற்தொழில் அமைச்சுக்கான நிதிஉதவியும் பிற மாவட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. (சி)

## யாழ். நகரில் நுளம்பு தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதியில் பல இடங்கள் நுளம்புகளின் உறைவிடமாக விளங்குகின்றது. இங்குள்ள வீதிகளும், வாய்க்கால்களும் குப்பை கூழங்களாலும், கழிவுகளும் மூடிக்கிடக்கின்றன.

இதனால் வாய்க்கால்களில் வெள்ளம் ஓடமுடியாமல் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருகி இப்பகுதி மக்கள் இரவு பகலாக நுளம்புக்கடியினால் அவதியடைந்து வருகின்றனர். (.4)

## இந்து இளைஞர் பேரவைக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட பொதுக்கூட்டம் இம்மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. தெ. தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (154)

## பேச்சு நடத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்ட அவர் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு இருதரப்பினரும் முயற்சி செய்வதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினார். (க)

## வயிற்றில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னரோ, ரெலோ இயக்கத்தினரோ அவரை அணுகாது அப்பகுதியைவிட்டு உடனே சென்றுவிட்டனர்.

இராணுவத்தினர் சென்றதும், காயமடைந்த நாதனுக்கு உதவிசெய்ய ஓடிவந்த பொதுமகன் ஒருவர் குப்புறக் கிடந்தவரை புரட்டியபோது கைக்குண்டுகள் வெடித்ததில் இருவரும் அதே இடத்தில் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வி)

## மூடப்பட்ட நிலையில் ஆனையிறவு மருந்துச்சாலை

(பண்டத்தரிப்பு)

ஆனையிறவு அரசினர் மத்திய மருந்துச்சாலை அப்பகுதியில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த 5 மாத காலமாக மூடப்பட்ட நிலையிலிருந்துவருகின்றது.

இங்கு கடமையாற்றிய வைத்திய பொறுப்பதிகாரியான டாக்டர் கொக்குவில் மத்திய மருந்துச்சாலையிலும், மருந்துக்கலவையாளர் வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையிலும் தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர். (72)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.